**தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் - 2013**

---

செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த செயற்திடடமானது இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1 ஆம் பொதிக்கான பீஎல்ஏ 201011 ஆம் இலக்கம் மறறும் 2 ஆம் பொதிக்கான பீஎல்ஏ 201012 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கைத்தொழில்கள், சுற்றுலாத்துறை, மீன்பிடிகள் மற்றும் விவசாயம் என்பவற்றில் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதன் மூலம் தென் மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் வெளிப்பாடு தென் மாகாணத்தின் தலைநகராக இருந்த காலிக்கான நெடுஞ்சாலையிலிருந்து நுழைவுப் பாதை ஒன்றுடன் தென் மாகாணத்தில் மாத்தறைக்கு நுழைகின்ற கொழும்பில் கொட்டாவையை இணைக்கின்ற இலங்கையினுடைய முதலாவது கட்டுப்பாட்டு நெடுஞ்சலையாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 639.74 மில்லியனாகும். அதில், ஐ.அ.டொலர் 164.6 மில்லியன் அல்லது 25.73 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்திற்காக கடனளிக்கும் முகவர்கள் மற்றும் இலங்கை அரசாங்கம் என்பவற்றால் நிதியளிக்கப்பட்ட தொகைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கடனளிக்கும் முகவர்** | **தொகை** | **சதவீதம்** |
|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்லியன்) | (%) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 164.60 | 25.73 |
| சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி | 103.00 | 16.10 |
| நோர்டிக் அபிவிருத்தி நிதியம் | 5.40 | 0.84 |
| சுவீடிஸ் சர்வதேச அபிவிருத்தி மன்றம் | 0.80 | 0.13 |
| சீனா எக்ஸ்சிம் வங்கி | 138.21 | 21.60 |
| இலங்கை அரசாங்கம் | 227.73 | 35.60 |
| மொத்தம் | 639.74 | 100.00 |

செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுலாக்கல் 2003 சனவரியில் தொடங்கப்பட்டிருந்தது. 95.05 கிமீ உள்ள கொட்டாவையிலிருந்து பின்னடுவ (காலி) வரையான வீதி மற்றும் 5 கிலோமீற்றர்கள் காலித்துறைமுகத்தை அணுகும் வீதி என்பன பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2011 நவம்பர் 27 போக்குவரத்திற்காக திறந்துவிடப்பட்டது. 2011 நவம்பர் 18 ஆந்திகதிய 1732/12 ஆம் இலக்க அரசாங்க வர்தமானி அறிவித்தலின்படி பயன்பாட்டாளர் கட்டண நெடுஞ்சாலையாக தென்பகுதி அதிவேக நெடுஞ்சாலையை அரசாங்கம் பிரகடனப்படுத்தியது. மாத்தறையில் பின்னடுவை முதல் கொடகம வரையான அதிவேக நெடுஞ்சாலையின் மீதிப் பகுதி கடன் உடன்படிக்கைகள் இல. பீஎல்ஏ - 201011 மற்றும் இல. பீஎல்ஏ - 201012 என்பவற்றின் கீழ் சீன எக்ஸ்சிம் வங்கியிலிருந்து பெறப்பட்ட ரூபா 15.98 பில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 138.21 மில்லியன் நிதியைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்படுகின்றது. அதிவேக நெடுஞ்சாலை கொடகம வரை நிரந்தர கட்டண சேகரிப்பை நிறுவுதலுடன் 2014 பெப்ரவரி அளவில் முழுமையாக செயற்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. பினனடுவயிலிருந்து கோதகம வரையான பகுதி (மாத்தறை) 2014 மார்ச் 16 இல் போக்குவரத்திற்கு திறந்துவிடப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

### 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது ஒரு அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது

உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்கள் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்குகின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிசார் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 17,662,585,157 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 103,102,325,947 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பனவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின வகை | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | (3,602,981)* | (4,119,579) | 16,848,535 |
| பூர்த்தியாக்கப்பட்ட வேலைகள்/ நடைபெறும் வேலைகள் | 17,666,188,138 | 10,559,475,327 | 103,085,477,412 |
| | 17,662,585,157 | 10,555,355,748 | 103,102,325,947 |

* சொத்துக்களின் பெறுமதியானது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அத்தகைய சொத்துக்கள் மாற்றப்பட்ட காரணமாக எதிர்மறையாக இருந்தது.

### 4.2 கட்டுநிதி நிதியக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்குகளின் செயற்பாடுகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | 2013 மே 31 இல் உள்ளவாறு ஆசிய அபிவிருத்தி வங்கி | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நோர்டிக் அபிவிருத்தி நிதியம் (என்டிஎவ்) | |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா |
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 77,670 | 9,876,593 | 2,834 | 269,454 |
| கூட்டு:- மீள் நிரப்பல்கள் | - | - | - | - |
| கழி: | | | | |
| பற்றுதல்கள் | 77,670 | 9,813,810 | - | - |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 62,783 | - | - |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை | 2,834 | 269,454 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமிச்சில் கிடைத்த தகவல்களுடன் செயற்திட்டத்தின் கிரயம் தொடர்பான தகவல்களை இணக்கம் செய்வதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ரூபா 2,619,264,907 தொகையான செயற்திட்டத்தின் கிரயம் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 2,629,078,717 ஆக காட்டப்பட்டிருந்தது.

### 5.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் பொதி 1 இன் கீழுலுள்ள ஒப்பந்த நிபந்தனை விபரங்களின் 14.6 ஆம் உட்பிரிவின்படி, இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் (ஐபிசீ) ஊடாக ஆகக் குறைந்த கொடுப்பனவு ரூபா 150 மில்லியனாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும், இடைக்கால கொடுப்பனவு- கொடுப்பனவுச் சான்றிதழ் 17 மூலம் உப ஒப்பந்தகாரருக்கு விசேட கொடுப்பனவாக ரூபா 5.15 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்- 2006 இன் 8.13 ஆம் பந்தியிலுள்ள அறிவுறுத்தல்களிற்கு முரணாக ரூபா 552,438 கிரயத்தில் அசையும் வழங்கலிற்கான முரண்கட்டளைகள் மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத ரூபா 2,205,677 கிரயத்தில் மேம்பால நிர்மாணம் பொதி -2 இன் கீழ் அனுமதிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

## 6. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிசார் செயலாற்றல்

பின்னடுவ முதல் கொடகம வரையான பிரிவின் அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணத்திற்காக மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் மற்றும் 2013 திசெம்பர் 31 வரை ஏற்பட்ட திரண்ட செலவினம் என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பொதி | மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட செலவினம் |
| --- | --- | --- |
| | (ரூபா மில்) | (ரூபா மில்) |
| பொதி 1 (பின்னடுவ முதல் கொடகொட) வரை) | 10,170 | 4,177 |
| பொதி 2 (கொடகொட முதல் கொடகம) வரை) | 8,530 | 5,075 |
| | 18,700 | 9,252 |

**6.2 ஒப்பந்த நிர்வாகம்**

கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், அதிவேக நெடுஞ்சாலையின் பின்னடுவ முதல் கோதகம வரையான பிரிவின் நிர்மாண வேலைகளானது ஒப்பந்தகாரரின் தவறு காரணமாக தாமதமாக நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்டமையால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்மார்க்கப்பட்ட மட்டத்தை விட குறைவாக இருந்தது. எவ்வாறாயினும், 2014 மார்ச் வரை ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஒப்பந்த நிபந்தனையின் 14.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம், ரூபா 18,700 மில்லியன் தொகையான ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பெறுமதியின் 20 சதவீதம் அதிவேக நெடுஞ்சாலையின் பின்னடுவ முதல் கோதகம வரையான பிரிவின் நிர்மாண வேலைகளிற்காக முற்பண கொடுப்பனவாக செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், பொதி 1 இன் கீழ் ரூபா 522,272,250 மற்றும் பொதி 2 இன் கீழ் ரூபா 438,027,750 தொகையான மேலதிக முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

**6.3 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகளில் இழப்பீட்டு கொடுப்பனவு தீர்ப்பதற்கான தாமத்தில் வட்டியாக செயற்திட்டத்தால் ரூபா 373 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6.4 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது எய்தப்படவேண்டிய இலக்குகளுடன் பிரதான பதவியணியினருக்கான பொறுப்புக்களை தெளிவாக இனங்காட்டக்கூடிய அதிவேக நெடுஞ்சாலையின் பின்னடுவ முதல் கோதகம வரையான பிரிவிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றத்தை அமைக்கப்பட்ட நோக்கங்களை எய்தும் நோக்கில் சரியான அளவீடுகளை எடுப்பதற்கும் முக்கியமான மாற்றங்களைச் செய்வதற்குமாக முறைப்படி மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளரால் அறிவுறுத்தப்பட்டவாறு செயற்திட்டத்தால் 04 ஆலோசனையாளர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அவர்களிற்கு ரூபா 2,245,125 தொகையான வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆலோசனையாளரின் வேலை விபரங்கள் செயற்திட்டத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.